8th December 1961]

Families of Jail Wardens (aid)

* 2199 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN: கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) போலீசார் குடும்பங்களில் உள்ள பெண்கள் வேலை செய்து சம்பாதிப்பது போல் ஜெயில் வார்டர்களின் குடும்பங் களில் உள்ள பெண்களும் கைத்தொழில்களில் பயிற்சிபெற்று சம்பாதிக்க வசதி செய்ய உத்தேசமுண்டா?

(இ) எப்போது, எந்தெந்த ஜில்லாக்களில்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (அ) No Sir.

(இ) Does not arise.

Sri V. K. KOTHANDARAMAN: ஸார், போலீசார் குடும்பங் களிலுள்ள சிறிய பெண்களுக்கு மாத்திரம் இது போன்று ஒரு வசதி செய்துகொடுத்திருக்கும்போது இந்த ஜெயில் வார்டர்களின் குடும்பங்களில் இருக்கின்ற பெண்களுக்கும் இது போன்ற வசதி கள் செய்து கொடுக்க முடியாததற்குக் காரணம் என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: பட்சபாதம் ஒன்றும் இல்லை. முடியாததும் ஒன்றும் இல்லை. போலீஸ் இலாகா வில் அதைச் சேர்ந்தவர்கள் இதில் அக்கரை எடுத்துக்கொண்டு செய்து வருகிறார்கள். அதற்கு என்று பெனிபிட் பண்ட் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அப்படி ஒதுக்கி வைத்து நடத்தி வருகிறார்கள். அம்மாதிரி ஜெயில் இலாகாவிலும் ஒதுக்கி வைத்து யாராவது அக்கரை எடுத்துக்கொண்டு நடத்தி வரலாம். அப்படி யாராவது அக்கரை எடுத்துக்கொண்டால் அவருக்கு உதவி அளிக்க சர்க்கார் முன் வரும்.

Panchayat Presidents (Election)

* 2200 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

போட்டியில்லாமல் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் பஞ்சா யத்து யூனியன்களுக்கு என்னென்ன விதமான சலுகைகள் காட்டப்படும்?

The Hon. Sri C. SUBRAMANIAM: There are at present no proposals under consideration of the Government in this regard.

Sri N. R. THIAGARAJAN: போட்டியில்லாமல் செயல்படும் பஞ்சாயத்துக்களுக்கு சர்க்கார் சலுகை காட்டும் என பத்திரிகை களில் செய்தி வந்ததே, அதைப்போல் அசெம்பிளி தேர்தலிலும் போட்டியில்லாத தொகுதிகளுக்கு சலுகை காட்டப்படுமா? என் தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்தால் போட்டியிட மாட்டேன் என்று ஒருவர் கூறுகிறாரே அதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளுமா?

[8th December 1961

The Hon. Sri C. SUBRAMANIAM: அது பஞ்சாயத்துக்கு பொருந்துமே தவிர அசெம்பிளிக்கு பொருந்தாது. அசெம்பிளி கட்சி அடிப்படையில் நடந்து வருகிறது. கட்சி அடிப்படையில் அசெம்பிளி நடப்பது அவசியமாக இருக்கிறது. பஞ்சாயத்துக்கள் அப்படி இல்லை. அதனால் இங்கு அப்படி இருப்பது அவசியம் இல்லை. இங்கும் அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தால் அப்படி இங்கு விட்டுக் கொடுக்க எவ்வளவோ பேர்கள் தயாராக இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

Water level in Wells

* **2201 Q.—Sri S. M. ANNAMALAI**: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மின்சார உபயோகத்தினால் கிணறுகளின் நீர்மட்டங் கள் குறைந்து விட்டதை சர்வே செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (அ) No, Sir.

(இ) Does not arise.

Tuberculosis and Leprosy patients (Surgical treatment)

* **2202 Q.—Sri V. K. KOTHANDARAMAN**: கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) T. B., Leprosy போன்ற தொத்து வியாதியஸ்தர் களுக்குக் கட்டாய அறுவை சிகிச்சை கொடுக்கும் உத்தேச முண்டா ?

(இ) இப்போது நமது ராஜ்யத்தில் மேற்கண்ட வியாதியஸ் தர்கள் எவ்வளவு பேர்கள் என்று கணக்கு எடுக்கப்பட் டுள்ளதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: (அ) & (இ) No Sir, நோயாளிகளின் புள்ளி விவரம் கேட்கப்பட்டிருக்கிறது. 1960-ம் ஆண்டில் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கையாவது :

ட்யூபர்க்லோஸிஸ்	109,881
லெப்ரஸி	48,793

Sri V. K. KOTHANDARAMAN: பத்திரிகையிலே மத்திய சர்க்கார் வெளியிட்ட புள்ளிவிவரப்படி, இந்தியாவில் ட்யூபர்க்லோஸிஸ், லெப்ரஸி நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏறக்குறைய ஒரு கோடி பேர்கள் என்று தெரிகிறது. இந்த ராஜ்யத்தில் மட்டும் ஐந்து லட்சம் பேர்கள் ட்யூபர்க்லோஸிஸ்